ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2451/10 - 2025 අගෝස්තු මස 25 වැනි සඳුදා - 2025.08.25

*2451/10 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுச் சட்டம்

பிரிவு 2 இன் கீழான கட்டளை

*1.* 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆவது பிரிவின்படி எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், இந்த கட்டளையின் மூலம், இங்குள்ள அவ் அட்டவணையின் நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பாக அட்டவணையின் நிரல் II இல் அதற்கு நேரொத்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான விகிதங்களில் ஒரு விசேட வியாபாரப்பண்ட அறவீட்டை விதிக்கின்றேன்.

**அட்டவணை**

| *நிரல் I* | | | | *நிரல் II* |
|---|---|---|---|---|
| *வியாபாரப் பண்டம்* | | | | *விசேட வியாபாரப் பண்ட அறவீடு* |
| | *இ.மு. தலைப்பு* | *இ.மு. குறியீடு* | *விபரம்* | |
| 1. | 07.01 | 0701.90 | ஏனையவை - உருளைக் கிழங்குகள் | 1 கி. கி ஒன்று ரூபா 80 |
| 2. | 07.03 | 0703.10.20 | பெரிய வெங்காயம் | 1 கி. கி ஒன்று ரூபா 50 |

*2.* உருளைக் கிழங்கு (இ.மு.குறியீடு 0701.90) மற்றும் பெரிய வெங்காயம் (இ.மு.குறியீடு 0703.10.20) தொடர்பாக 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுச் சட்டத்தின் பிரிவு 2 மற்றும் பிரிவு 5 இன் கீழ் பிறப்பிக்கப்பட்டு 2024 திசெம்பர் 31 ஆம் திகதிய விசேட வர்த்தமானி அறிவித்தல் இல. 2417/20 இல் வெளியிடப்பட்ட கட்டளை 2025 ஓகத்து 26 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்படுகின்றது.

1A - PG 7233— 429 (2025/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. இந்த உத்தரவு 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் இன் துணைப் பிரிவு (3) இன் விதிகளுக்கு உட்பட்டு 2025 ஓகத்து 26 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 03 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2025, ஓகத்து 25.

EOG *08 - 0276*